**Previous Examination date –**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 524 of 2012**

**Deposition of Witness P.W.1**

| | |
|---|---|
| **Name : முத்துச்சாமி** | **Father/Husband's Name: வீரன்** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling:** |
| **Religion:** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 14.11.2022**

**முதல் விசாரணை**

நான் தற்போது கோதைமங்களத்தில் குடியிருக்கிறேன். கூலி வேலை செய்கிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். 23.04.2012 ம் தேதி இரவு சுமார் 11 மணிக்கு நான் வீட்டில் இருந்த போது நான், என் அப்பா, அம்மா, தங்கை, குழந்தைகள் அனைவரும் வீட்டில் இருந்த போது ஆஜர் எதிரிகள் மற்றும் இறந்து போன ராம்குமார், மாரியப்பன் ஆகியோர்கள் கையில் கட்டை, கல்களுடன் வந்து என்னை மற்றும் அப்பா, அம்மா, வீட்டில் உள்ள அனைவரையும் அடித்து காயப்படுத்தினார்கள். மேலும் பார்த்து கொள்ளலாம் என்று போதையில் பேசினார்கள். அடித்ததில் என் அப்பாவிற்கு இரத்த காயம் ஏற்பட்டது. கையில் காயம் ஏற்பட்டது. இதில் எனக்கு மண்டையில் காயம் ஏற்பட்டது. என் தம்பி செல்வத்திற்கு ரீப்பரில் அடித்ததில் காயம் ஏற்பட்டது. காயம்பட்ட நாங்கள் ஆம்புலன்சுக்கு போன் செய்து பழனி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சேர்ந்தோம். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்திலுள்ள கையொப்பம் என்னுடையது தான். சாட்சி கையொப்பம் இட்டுள்ளது எனது தம்பி செல்வம் ஆவார். **புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

**இல்லை**

K R KALAIVANAN
Digitally signed by K R KALAIVANAN
Date: 2022.11.14 18:46:01 +0530

நீதித்துறை நடுவர்,
**பழனி.**

**Previous Examination date –**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 524 of 2012**

**Deposition of Witness P.W.2**

| | |
|---|---|
| **Name : செல்வன்** | **Father/Husband's Name: வீரன்** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling:** |
| **Religion:** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 14.11.2022**

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது கோதைமங்களத்தில் குடியிருக்கிறேன். கூலி வேலை செய்கிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். அ.சா.1 எனது அண்ணன். 23.04.2012ம் தேதி இரவு 11.00 மணிக்கு நான் எனது அண்ணன் அ.சா.1, அப்பா, அம்மா, மனைவி, குழந்தைகள் ஆகியோருடன் வீட்டில் இருந்த போது ஆஜர்எதிரிகளுடன் 10, 15 பேர் கையில் கட்டை மற்றும் பீர்பாட்டில் ஆகியவற்றுடன் வந்து என்னையும் அண்ணன் அ.சா.1, எனது அப்பா, அம்மா, மாமா ஆகியோர்களையும் அடித்தார்கள். 2ம் எதிரி இளையராஜா கட்டையால் அடித்ததில் எனக்கு மண்டை உடைந்தது. மேலும் கை, கால் ஆகியவற்றில் ஊமை அடி ஏற்பட்டது. எதிரிகள் பீர்பாட்டிலை உடைத்து மண்டையில் குத்தியதில் என் அண்ணனுக்கு இரத்த காயம் ஏற்பட்டது. என் அப்பாவுக்கு இடுப்பு, கை, கால் காயமானது. திருப்புழியால் அல்லையில் குத்தியதால் காயமானது. என் அம்மாவை கல்லால் தாக்கியதால் கை, மணிக்கட்டில் காயமானது. என் மாமாவிற்கு எதிரிகள் கட்டையால் அடித்ததில் வலது கை உடைந்தது. இளையராஜா எங்களை பார்த்தால் நீங்கள் ஊரில் எப்படி இருக்கிறீர்கள் உங்களை கொல்லாமல் விடமாட்டோம் என்று கொலைமிரட்டல் விடுத்தார். காயம்பட்ட நாங்கள் பழனி அரசு மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸ் மூலமாக சிகிச்சைக்கு சேர்ந்தோம். 10 பேர் எங்களை தாக்கினார்கள் 4 பேர் மேல் மட்டும் தான் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த பிரச்சனைக்கு எல்லாம் காரணம் சக்திவேல் தான். அவர் பெயரை சேர்த்து தான் புகார் செய்தோம். அ.சாஆ.1 புகார் வாக்குமூலத்திலுள்ள சாட்சி கையொப்பம் என்னுடையது

தான்.  இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

**இல்லை**

K R KALAIVANAN
Digitally signed by K R KALAIVANAN
Date: 2022.11.14 18:46:10 +0530

நீதித்துறை நடுவர்,
**பழனி.**

**Previous Examination date –**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure**
**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 524 of 2012**

**Deposition of Witness P.W.3**

| | |
|---|---|
| **Name : வீரன்** | **Father/Husband's Name: பொட்டி** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling:** |
| **Religion:** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 14.11.2022**

**முதல் விசாரணை**

நான் தற்போது கோதைமங்களத்தில் குடியிருக்கிறேன். கூலி வேலை செய்கிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். அ.சா.1, அ.சா.2 எனது மகன்கள். சுமார் 10 வருடத்திற்கு முன்பாக இரவு 10.00 மணிக்கு வீட்டில் நான், எனது பசங்கள், என் மனைவி ஆகியோர்கள் குடும்பமாக இருந்த போது ஆஜர் எதிரிகள் மற்றும் 4, 5 பேர்கள் வந்து உருட்டுக்கட்டை, பீர்பாட்டிலால் ஆஜர் எதிரிகள் என்னை பீர்பாட்டிலால் இடது கையில் தாக்கினார்கள் எனக்கு காயமானது. வீட்டை எல்லால் பிரித்து எரிந்தார்கள். கதவை எல்லாம் உடைத்தார்கள். என் மகன்கள் நான்கு பேத்தையும் உருட்டுக்கட்டை, பீர்பாட்டிலால் அடித்தார்கள். என் பசங்களுக்கு தலை, கையில் காயமானது. பழனி அரசு மருத்துவமனைக்கு 108 ஆம்புலன்ஸ் மூலமாக சிகிச்சைக்கு வந்தோம். ஆம்புலன்சை எதிரிகள் எங்களை தூக்க கூடாது என்று குறுங்காட்டினார்கள். அரசு மருத்துவமனைக்கு வந்தும் அடித்தார்கள். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

**இல்லை**

K R KALAIVANAN
Digitally signed by K R KALAIVANAN
Date: 2022.11.14 18:46:19 +0530

நீதித்துறை நடுவர்,
**பழனி.**